REG No M 2997.

தனிப்பிரதி அணா. 1

ஆசிரியர்.
ச. கந்தையபிள்ளை

LeRédacteur
S.CANDIAH PILLAI

# வித்தகம்

ஒரு செந்தமிழ் வாரப் பத்திரிகை

VOL. III | புதுவை, தாது ஹூ கார்த்திகை மீ" சஉ (19—11—36) | No.48,49

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

ஏத்தாதிருந்தறியேனிமையோர்தனிநாயகனே
மூத்தாயுலகுக்கெல்லாமுதுகுன்றமமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள்பரவையிவள்தன்முகப்பே
கூத்தாதந்தருளாய்கொடியேனிட்டளங்கேடவே.

பிறையாருஞ்சடையெம்பெருமானருளாயென்று
முறையால்வந்தமரர்வணங்குமுதுகுன்றர்தம்மை
மறையார்தங்குரிசில்வயல்நாவலாரூரன்சொன்ன
இறையார்பாடல்வல்லார்க்கெளிதாஞ்சிவலோகமதே.

உ

திருவருள் துணை.

ஓம் நந்திபதி கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.
[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை
தாது ௵ கார்த்திகை மீ ௪ உ

## எமது பத்திரிகை.

திருவாசகம்.

———

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்
[கட்கும்
தேரிக்கும் படித்தன்றி நின்றசிவம்
[வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பது
[கேட்டலகமெல்லாம்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங்
[கொட்டாமோ.

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டு
[நிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவ
[மாக்கும்
அத்தன் கருணையினுற் றோணேக்க
[மாடாமோ.

திருவோங்கு வளப் புதுவை என்னும் திருப் பெருந்துறையில் எழுந்தருளி யிருக்கும் ஞானாசாரியனும் கயிலை முதற் குரவனுமாகிய நந்தியெம் பெருமான் திருவருளாணையால்,

கலி ஐயாயிரத்து முப்பத் தைந்தாம் ஆண்டாகிய சென்ற ஸ்ரீமுக ஆண்டு கார்த்திகைத் திங்களில் கார்த்திகைத் திரு நாளில்,

வேதபுரி எனப் போற்றப் படும் புதுவையம் பதியாம் கோகழியில் உதயமான எமது "வித்தக" ஞானச் சுடர் நிகழும் தாது ஆண்டு கார்த்திகைத் திங்களில் கார்த்திகைத் திரு நாளில் மூவாண்டு நிறைவு பெறுகின்றது.

ஞான சத்தி வடிவம் எனப்படும் சாந்த சிவ வடிவினனாகிய எம்பெருமான் அருண்மாரி என வழங்கிய வேத உண்மைகளே சென்ற மூவாண்டுகளாக வெளிவந்த "வித்தக"க் கதிர்களால் எமது சிற் றறிவிற்கு எட்டிய அளவில் விளக்கிக் கூறப் பட்டுள்ளன.

கயிலை முதற் குரவனாகிய சற்குரு நாதன் அருளால் பெறப்படும் இயற்கை முறையான வாய்மையான சாதகங்களால்,

அஃதாவது முன்னிலை யாகிய மாயா காரியங்களை நிறை முறையோடு பஞ்சீகரணித்தலால்,

உடலுயிர் அமலமடைந்து ஒழிவற ஒன்றி அருள் வடிவாய் ஞானாகாசத்தில் ஞானாகாசமாகிய பரத்தில் உலகு கண்டிட மறைந்து—ஒடுங்கிச் சிவாங்கமாதலாகிய பண்டைய உண்மைச் சைவ முத்தி நிலையே "வித்தகம்" நுதலிய பொருளாகும்.

இதுவே சென்ற மூவாண்டுகளாக வெளி வந்த "வித்தக"க் கதிர்களில் அதிகரித்து நின்ற பொருளாகும்; பிரபல சுருதிப் பிரமாணங்களோடு பல்லாற்றானும் வெள்ளிடை விலங்கல் என விளக்கி நிறுவப்பட்ட பொருளாகும்.

வேதம், உபநிடதம், ஆகமம், புராணம், இதிகாசம் என உலகில் வழங்கும் அரிய பெரிய நூல்களாலும்; திருவாசகம், திருக்கோவை தேவாரம், திருமந்திரம், திருவாய்மொழி, ஔவை குறள், மூவடி முப்பது முதலிய தெய்வத்தமிழ் மறைகளாலும், வாய்மையான சித்தர் நூல்கள் என வழங்கும் மறை நூல்களாலும் அநுபவ முறையாக விளக்கி நிறுவப்பட்டதும்,

எத்தனையோ இருடிகள் முனிவர்களாலும், மணிவாசகர், ஞானசம்பந்தர், அப்பர், தம்பிரான்றோழர், திருமூலர், இடைக்காடர், கண்ணப்பர், நந்தனார், முதலிய (அறுபத்து மூவர்) மெய்யடியாராலும், ஆழ்வார் என்னும் திருநாமத்துக்க வாய்மையில் இலக்கியமாகி வதிந்த மகான்களாலும், பட்டினத்தார், பத்திரகிரியார், சேந்தனார், முத்துத்தாண்டவர் என்பவர்களாலும்—சுருங்க உரைக்குமிடத்து,

உலகம் தோன்றிய தொட்டு நித்தியத்துவம் பெற்ற தத்துவப் பெரியார் யாவராலும் பல்லோரும் கண்டு போற்றும்படி உடலோடு மறைந்து அடையப் பட்டதுமாகிய உண்மைச் சைவ முத்தி நிலையானது,

படிப்பினால் வல்லபம் பெற்று மேதாவிகள் என உலக மாக்களால் போற்றப்பட்ட சாத்திர நிபுணர் முதலிய பலர்க்கும் பன்னெடுங் காலமாக முற்றுக மறைபொருளே ஆயினமையால்,

சரீரம் பிணி மூப்புக்களால் நலிந்து பிணமாதலே—விதி யென்னும் மாயை வலைப்பட்டுச் செத்துப்போதலே — சவ நெறியாகிய அவ நெறியே – அசேதனத்துவம் அடைந்து பிறவி வலைப்படுதலே தற்காலச் சைவர் வைஷ்ணவர் எனப்படுவோர் யாவருக்கும் உயரிய வேதாந்த சித்தாந்த தத்துவமும் சத்திய நெறியாகிய சிவ நெறியும் முத்தி நிலையும் ஆயிற்று.

இவ்வாறு பண்டைச் சத்திய நெறியாகிய சிவ நெறி மறைந்து அசத்திய நெறியாகிய சவ நெறியே சிவ நெறியாகிய முத்தி நெறி எனத் தற்

காலத்தில் தாண்டவம் புரிதலால் சைவம் பாழ்பட்டமை பற்றியே எம்பெருமான் திருவருளாணையால் பண்டைய உண்மைச் சைவக் கொள்கையாகிய முத்தி நிலையின் அருமை பெருமை விளக்கப்பட வேண்டிய தாயிற்று.

இதன் பொருட்டாகவே எமது "வித்தகம்" எம் பெருமான் கோயில் கொண்டருளிய தெய்விகம் திகழும் புதுவையம் பதியாம் திருப்பெருந்துறையில் உதயமாயிற்று என அறிதற்பாற்று.

ஆதலால் "வித்தகம்" நுதலிய பொருளாய் இம் மூவாண்டுகளாக வெளி வந்த ஷெ "வித்தகம்" சஞ்சிகைகளில் ஆங்காங்குத் தொகை வகை விரியான் விளக்கமுற உரைக்கப்பட்ட உண்மை முத்தி நிலையின் அருமை பெருமையை ஈண்டு ஒரு சிறிது கூறி அப்பாற் செல்லுதும்.

முன்னிலையாய் விளங்கும் இப்பிரபஞ்சம் பிரம சொரூபமே என்று— "ஸர்வம் பிரம மயமே" என்று சுருதிகள் முழங்குகின்றன.

இச் சுருதிகளைப் படித்து விரிவுரைகள் நிகழ்த்தும் மேதாவிகளும் இவ்வாறே வாளாங்கு ஓலமிட்டு அமைகின்றனர்.

முன்னிலை யாவும் பிரம சொரூபம் எனவே தன்னிலையும் அன்ன நீர்மைபததே என்பது சொல்லாமலே அமையும்.

இவ் வுண்மையைக் குருவருளால் அநுபவமாக—பிரத்யட்சமாகக் கண்டு முன்னிலையாய் விளங்கும் பிரமத்தை உண்டு தன்னிலையாகிய உடலுயிர் அமல மடையப் பெற்று அருளொளி மயமாய் அகண்டாகார அமல ஒளி வடிவினதாகிய பிரமத்தோடு ஒன்றி நிற்றலே—பிரமமாய் நிற்றலே—சிவாங்கமாதலே உண்மை நிலையாகும் — உண்மை முத்தி நிலையாகும்.

இப் பெற்றி கை வருதற்குரிய நெறியை நாடாது, முன்னிலையாய் விளங்கும் பிரமத்தை அலட்சியம் செய்து—மண் பெண் பொன் என்பனவற்றை வெறுத்து ஒருபால் ஒதுங்கித் "துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை" யாய் — அருந்தல் பொருந்தல் அமையப் பெறாது தன்னிலையாய் விளங்கும் பிரம சொரூபத்தை வாட்டி வருத்தி மெய்யுணர்ச்சி அற்று அம்சதனத்துவம் அடைந்த பின்—

சரீரம் பிணவியலடைய மாண்டு போனபின் பிரம சொரூபமாய் விட்லாம் — நித்தியத்துவம் பெறலாம் என்பது முற்றாக முடியாத காரியமே; இயற்கை விரோதமே; சுருதி யுத்திகளுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத வெற்றுரையே ஆகும்.

முன்னிலையை உறவு செய்தலால் பிரமமாதல் எவ்வாறு? எனின், சிறிது கூறுதும்:—

அகத்தும் புறத்தும் தானும் தானல்லாததாயும் விளங்குவது பிரமம் ஆதலால், குரு நெறி கடைப்பிடித்து வழுவாது ஒழுகித் தன்னிலையாகிய அகத்தே உணர்ச்சி வடிவாய் விளங்கும் பிரமத்தோடு புறத்தே முன்னிலையாய் விளங்கும் பிரமத்தை— உணவாய் — உணர்வாய் விளங்கும் பிரமத்தை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால் சேர்க்க வேண்டும்; சேர்த்து விளைவேற்ற வேண்டும் என்க.

இதனாற்றான் உணர்ச்சி தூய்மை அடையும் — உணர் வெனும் பெரும் பதம் தெரிய வரும். அமல உணர்ச்சி வடிவினதே சிவம் — பிரமம் எனப்படுவது. உணர்ச்சி தூய்மை அடைதலே உடலுயிர் அமலம் அடைதலும் ஆம்.

## திருவாய்மொழி.

———

"..........................................
உணர்வெனும்பெரும்பதந்தெரிந்து
நாடினேன்நாடிநான்கண்டுகொண்டேன்
நாராயணாவென்னுநாமம்."

என அருளிச் செய்தார் முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால்—கற்றல் என்னும் களவொழுக்கப் பயில்வால் — பஞ்சமஆகுதி என்னும் ஐந்தெழுத் தருச்சனையால் உடலுயிர் அமல மடைந்து உலகு கண்டிட மறைந்து உண்மை முத்தியடைந்த திருமங்கை யாழ்வார்.

"நானேயோதவஞ்செய்தேன்சிவாயநம
[என்ப்பெற்றேன்"

என்னும் திருவாசக சுருதிச் செம்பொருளும் இதுவே ஆம்.

களவொழுக்கப் பயில்வால்—நிறை முறையான அருந்தல் பொருந்தலால் உடலுயிர் அமல மடைதலால் எம்பெருமான் உடலிற் குடி புகுந்த உண்மையே — தன்னிலை பிரமமான உண்மையே

"என்புள்ளுருக்கி............தில்லைமாண
[டானைக்கொண்டன்றே"

(திருவாசகம் குலாப்பத்து செ.13)

என்னும் அரிய பாசுரத்தாலும் மணிவாசகப் பிரபுவால் அருளிச் செய்யப்பட்டது.

ஆசான் உரை வழீ நின்று ஒழுகப்படும் வைதிக நெறியாகிய இத்தகைய ஒழுக்கமே — மலம் பரிபாகம் அடைதற்குரிய—பாசு பதமாதற்குரிய—பாசுபத விரத அநுட்டானமாகிய—இயற்கை நெறியாகிய இதுவே எல்லாச் சாதி யாளர்க்கும் எல்லாச் சமயத்தவர்க்கும—சகல சீவராசிகட்கும் உரிய சத்திய நெறியாகிய முத்தி நெறியாகும். ("வித்தகம்"1 இல. 37, 49 இல் "பாசு பதம்" "காய சித்தி" என்னும் கட்டுரைகளில் காண்க.)

இத்தகைய இயற்கையான ஒழுக்கத்தினாற்றான் தன்னிலை முன்னிலைகளாகிய துவந்துவங்கள் தூய்மை அடையும். பிரமமாதல் கை கூடும்— அத்துவித நிலை சித்திக்கும் என்க.

அஃதாவது இரண்டாகவே இருந்தும் இரண்டு என்னும் தன்மை அற்று விடும்; துவிதம் என்பதற்கு முன் அகரம் நின்று—அகரம் என்னும் ஆகாசம் நின்று துவிதம் என்பதைப் பிரித்துக் காட்டாது தன்னுள்ளே மறைத்து அ + துவிதம் (அத்துவிதம்) என்று காட்டி விடும் என்பது. உடலுள் ஆகாச பூதம் பெருக்கமடைதல் என்பதன் உண்மை இதுவே ஆம்.

அருந்தல் பொருந்தல் களால் அம்ருதம் சித்தித்தல் என்பதும் இதுவே ஆம். அஃதாவது நஞ்சு என்னும் ம்ருதத்தை நிறையுட் புகுத்தினல் — நிறை என்னும் சிவத்தில் சிவம் என்னும் அமல அக்கினியில் ஆகுதி கொடுத்தால் அமலம் என்னும் அகாரம் ம்ருதத்தின் வாயலில் நின்று ம்ருதம் என்பதை அம்ருதம் ஆக மாற்றும் என்பது அம்ருதத்துவமே (Immortality) நித்தியத்துவம் — பிரமமாதல் என அறிதற்பாற்று.

இதனுற்ருன் காணப்பட்டன எல்லாம் அழியும் தன்மை யுடையன எனவும் அதனுல் தோற்ற முடையன யாவும் அழிந்து விடும் எனவும் கூறப் பட்டன.

ஆனுல் இதன் மறை பொருள் இன்னது என அறியும் ஆற்றலும் காதலும் இல்லாதார் — புண்ணியம் இல்லாதார் படிப்பினுல் வல்லபம் பெற்று அதனுல் முற்றும் உணர்ந்து விட்டவராகத் தம்மை மதித்து எல்லாம் அநித்தியமே எனவும் அழிந்து விடும் எனவும் துணிந்து

"அவ் வளவில் அவன் மகிழ்க"

என்னும் நியாயத்துக்கு இலக்கியமாய் அம்மட்டோடு அமைந்து அப்பாற் சென்று மறை பொருளை — மறையின் உட் பொருளை நுணுகி ஆராயும் மதிப் பொலிவு சிறிதும் இன்மையால்,

குரு வருளால் அநித்தியமானதை நித்தியப்படுத்தி அம்ருதத்துவம் என்னும் நித்தியத்துவம் பெற அறியாது,

மண் பெண் பொன் என்னும் முன்னிலைகளை வெறுத்து ஒருபால் ஒதுங்கிச் சில நடை நொடிகளைக் கைக் கொள்ளுதலால் செத்த பின்பு தான் சுலபமாகப் பேரின்பம் சித்திக்கும் — முத்தி கிடைத்து விடும் என உழறிக் குழறி விதியை வெல்ல முடியாது அவ்விதி என்னும் மாயை வலைப்பட்டு மாண்டு பிறவி நெறி காண்பாராயினர்.

இன்னோன்ன அரிய பெரிய உண்மைகள் எல்லாம் சாத்திரங்கள் என வழங்கும் ஏடுகளால் அறியப் படுவன ஆகுமா?

இவ் வுண்மைகளை யெல்லாம்

## திருவாசகம்.

———

"..........................................

பையவேகோடுபோந்துபாசமெனுந்

[தாழுருவி

உய்ப்;நெறிகாட்டுவித்திட்டு.......,... ......"

எனவும் பிறவுமாக வரும் திருவாக்குக்களால் கௌணமாக அருளிப் போந்தனன் மணிவாசகன். கௌணப் பூரணமாகி மிளிரும் திருவாசகச் செழுமறையின் உண்மைப் பொருளை அறிவார்ப் பெறின் பண்டைய உண்மைச் சைவ முத்தி நிலை பல நூற்றுண்டுகளாக மறை பொருளே ஆகுமா?

துன்பம் நீங்கி இன்பம் பெற விழைவதே சீவ இயல் ஆதலால் — இன்பம் ஒன்றே சிறியதும் பெரியதுமாகி விளங்குதலால் அநித்தியமான சிற்றின்பத்தைக் கொண்டே — அதனை உறவுபடுத்தியே நித்தியமான பேரின்பத்தைப் பெற வேண்டும்.

அஃதாவது ஆசான் உரை வழி நின்று அநுட்டிக்கப்படும் சிற்றின்ப வாழ்வு என்னும் சிறு வாழ்வினுற்ருன் — களவொழுக்கம் எனப்படும் கந்தருவ வழக்கத்தினுற்ருன் — அருந்தல் பொருந்தல் களாற்ருன் பேரின்ப லாபம் பெற வேண்டும் என்பது.

முன்னிலையாய் விளங்கும் மண், பெண், பொன் என்பன வற்றினுற்ருன் வாய்மையான மண், பெண், பொன் என்பன வற்றை அடைய வேண்டும்.

இயற்கை முறையான இத்தகைய சாதகத்தால் இருவினை ஒப்பு மல பரிபாகம் வாய்க்கப் பெற்ற மெய்யடியார் விமல தநுவே. — கற்பகம் (கற்பு + அகம்) சித்திக்கப் பெற்ற — கல்வி பெற்ற — கல் என்னும் பஞ்ச தநு அழகு பெற்ற ரக்ஷக தேகமே "பூமா" (பூமி) என்னும் வாய்மையான மண்ணும் விமல காயப் பெண்ணாகிய — விமல சத்தியாகிய வாய்மையான பெண்ணும் அசுத்த தநுக்கள் நீறிச் "செம் பொன் செய் சுண்ணம்" ஆகப் பெற்ற வாய்மையான பொன்னும் ஆம் என அறிதற்பாற்று.

இப் பெற்றி கைவரப் பெற்றவரே புகலிடம் புக்கவர்; புக்குப் பொன் னெடுங்குன்றம் கண்டவர்; வாய்மையான இடம் பொருள் ஏவல் அமையப் பெற்றவர் — இந்திரர் — குபேரர்.

பிரணவ அமுதம் என்னும் அமல நீராகிய சிவ நீர் பெருக்கமுறும் இவ் விமல தநுவுடைய வித்தகரே தொட்டன யாவற்றையும் பங்கமில் தங்கமாக்கும் பண்புடையவர்; "ஓட்டினை எடுத்து ஆயிரத் தெட்டு மாற்றுக ஒளி விடும் பொன்னாக்க" வல்ல சித்த மூர்த்திகள். பரவையைக் கண்ட சுந்தரனுக்குக் கல்லும் பொன்னுயிற்று என்பதன் உண்மையும் இதுவே ஆம்.

பேரின்பம் எங்கே உண்டு? உடல் பிணமான பின் பேரின்பம் பெறுவது எப்படி? உடலகத்தே யன்றி வேறு எங்கே ஆக்க முறுவது பேரின்பம்? அன்பு என்ருல் என்னை? அஃது யாண்டுள்ளது? அருள் எங்குள்ளது? "அருள் என்னும் அன்பீன் குழவி" என்னும் தேவர் திருவாக்கின் பொருள் என்னை? அன்பும் அருளும் உடலகத்தே யன்றி வேறு எங்கே ஆக்க முறுவன?

அருளை ஈனும் வாய்மையான அன்பு ஆக்க முறுதற்குரிய சாதனம் களவொழுக்கப் பயில்வு எனக் காட்டுதற்கன்றே! எம் பெருமானுகிய ஆலவாயில் அவிர் சடைக் கடவுள் களவியல் என்னும் [illegible]தெய்வத் தமிழ் மறையை அருளிச் செய்தனர்!

முன்னிலைகளை வெறுத்து — மண், பெண், பொன்னை வெறுத்து ஒருபால் ஒதுங்கி வாயோடு கண்மூடி வதிதலால் அன்பு ஆக்க முற முடியுமா? "அன்பீன் குழவி" யாகிய அருள் கிடைக்கப் பெறுமா? அருளாளராய் நித்தியத்துவம் பெற முடியுமா?

சாத்திரங்களாகிய ஏடுகளுக்கும் படிப்பு வல்லபத்துக்கும் எட்டாத வாய்மையான "அன்பு" "அருள்"

என்பன வற்றின் இலக்கணம் "வித்தகம்" தொகுதி 1 இல. 33 35இல் விரிவுற விளக்கிக் கூறப் பட்டுள்ளது. ஆங்காங்குக் கண்டு தெளிக.

ஞானகாசத்தில் ஒடுங்குதற் குரிய அருள் வடிவம் வாய்மையான அன்பினாற்றான் ஆக்க முறும் என்பது "அருள் என்னும் அன்பீன் குழவி" என்னும் தேவர் திருவாக்கால் வெள்ளிடை ஆம்.

சிற்றின்பத்தை நிறை முறையோடு அநுபவித்து உய்தி யடைய முடியாது திராக்ஷ பல ஜம்புக நய மேற் கொண்டு அதனை வெறுத்து ஒருபால் ஒதுங்குதலால்,

பிணி மூப்புக்களால் நலிந்து சரீரம் சத்துப் போன பின்—செத்துப் போன பின்—பிணமான பின்—விதி என்னும் மாயை வலைப்பட்டு மரணம் அடைந்த பின்,

மேலே கிளம்பிப் பாய்ந்து மாயையைக் கடந்து வேறு எங்கோ சென்று (வேறு எங்கே செல்வது? எவ்வாறு செல்வது?) பேரின்ப லாபம் பெறலாம் என்பது கையகத்துள்ள வெண்ணெய்யைக் கபரின் கண் உகுத்து விட்டு ஆகாயத்தில் நெய் பெற முயலும் ஆதர் நீர்மையையே ஒக்கு மன்றி வேறு என்னை?

அகத் தூய்மை புறத் தூய்மை வாய்மையில் அமைதல் பற்றியே — உடலுயிர் அமல மடைதல் பற்றியே சிற்றின்ப நுகர்ச்சியாகிய களவொழுக்கப் பயில்வு கந்தருவ வழக்கம் எனப் படுவதாயிற்று என்க.

கந்தருவ வழக்கம் என்றால் என்னை? ஆதி தான் கந்து என்னும் அசுத்த காம உணர்ச்சி அருவ மாதற்குரிய (கந்து + அருவம்)-தூய்மை அடைதற் குரிய —அமல மாதற்குரிய ஒழுக்கம் என்று கூறப்படும்.

கற்றல் என்னும் களவொழுக்கப் பயில்வால் கந்து அழிதலே—மாற்றடைதலே கந்தழி சித்திக்கப் பெறுதல் என்பது இதுவே மல பரிபாகம்— இருவினை ஒப்பு மல பரிபாகம்—அமல முதற் படி—முத்தி வாயில் என அறிதற்பாற்று.

"மணங் கமழ் தெய்வத்து இளநலம்" என்னும் அநாதியான உண்மைச் சைவக் கொள்கை இதுவே ஆம். கந்தழியே சிவம். இப் பெற்றி கைவரப் பெறுதலே சிவ சம்பந்தம்—சைவம். இதுவே முத்தி நெறியாகிய சிவ நெறி.

இஃதல்லாத நெறி யெல்லாம் சவ நெறியாகிய அவ நெறியே — நெறி யல்லா நெறியே. இச் சவ நெறியையே "நெறி யல்லா நெறி" எனவும், இதனையே வாய்மை யென அமைந்து, கந்தழி சித்திக்கப் பெறுதலாகிய — சிவ நெறியாகிய மேலே கூறிய இயற்கை முறையான சாதகங்களை அறியாதுமாண்டு பிறவி வலைப்படுவோரையே "முத்தி நெறி யறியாத மூர்க்கர்" எனவும் பணித் தருளியது மணிவாசக சிவம் என அறிதற்பாற்று. (திருவாசகம் அச்சோப்பதிகம் பாசுரம் 1.2இல காண்க.)

இது பற்றி யன்றோ இருக்கு வேதம் முதலிய நூல்களும் தமிழ் மறைகளும் சிற்றின்பத்தினாற்றான் — சிற்றின்ப வாழ்வு என்னும் சிறு வாழ்வினாற்றான் —அருந்தல் பொருந்தல்கள் அமைந்த இல்லற வாழ்வினை மேற் கொண்டு ஒப்புர வொழுகுதலாற்றான் பேரின்ப லாபம் பெற வேண்டும் — உண்மை முத்தி யடைய வேண்டும் என வற்புறுத்துக் கூறுவன வாயின என அறிக.

இவ் உண்மையை வற்புறுத்தும் பிரமாணங்கள் பலவற்றை இம் மூவாண்டுகளாக வெளி வந்த "வித்தக" சஞ்சிகைகளில் கண்டு கொள்க.

கடைச் சங்கத்தை நிலை குலைத்த புலவர் சிங்கமும் முன்னிலையோர் கண்டு வியப்படையும் வண்ணம் அருட் புதுமைகள் பல விளைத்து உலக குரவராய் வதிந்து "மத்தியாரண்யம்" எனப்போற்றப்படும் இடைக் காட்டில் பல்லோரும் கண்டு போற்றும் படி அருள் வடிவோடு ஞானகாசத்தில் மறைந்தருளிய தத்துவப் பெரியாருமாகிய இடைக்காடர் தாம் அருளிச் செய்த "மூவடி முப்பது" என்னும் தெய்வத் தமிழ் மறையில்,

காமமே உலகியலாகிய பிரவிருத்திக்கும் உண்மை நிலையாகிய பாரமார்த்திகத்துக்கும் அடிப்படை என அதனையே "இன்பக் கூறு" என்னும் முதலாம் அத்தியாயத்தில் முதலாம் சூக்தமாக வைத்து,

நிறை முறையான சிற்றின்ப நுகர்ச்சியாற்றான் பேரின்ப லாபம் சித்திக்கப் பெறும் எனவும் அத்தகைய பேரின்பமும் தூய்மை அடையப் பெற்ற இவ் வுடலோடு தானே — இம்மையிற்றானே ("இம்மையே என்றலின்" ஷை ஆசைப் பேறு சூக்தம் 15,) அநுபவிக்கப்படும் என்பதே தத்துவப் பெரியார் துணிபும் வேத வுண்மையும் ஆம் எனவும் தடக்கை நெல்லி என விளக்கிக் காட்டியதனாலும்,

ஆசான் அருளால் அநுட்டிக்கப் படும் சிற்றின்ப நுகர்ச்சி என்னும் சிறு வாழ்வே—நிறை முறையான அருந்தல் பொருந்தல்களாகிய கற்றல் என்னும் பயில்வே பேரின்ப லாபம் பெறுதற் குரிய—உடலுயிர் அமல மடைந்து நித்தியத்துவம் பெறுதற்குரிய வாய்மையான சாதகம் என்பது—முத்தி நெறி என்பது உண்மை நூற்றுணிபாதல் நன்று கடைப் பிடிக்க.

அல்லதூஉம் விதி என்னும் பிரமனது தத்துவமும் சிற்றின்ப நுகர்ச்சி என்னும் காமத்தானன்றிப் பிறவாறு வெளிப் படாமையால், இனத்தை இனத்தால் ஈர்ப்பது போல,

அவ்விதி என்னும் பிரமதத்துவத்தை வென்று நித்தியத்துவம் பெறுவதும் இயற்கை நெறியாகிய அத்தகைய காமத்தானன்றிப் பிறவாற்றான் முடியாமையும் நன்று பெறப்படுதல் கண்டு கொள்க.

அவாவின் வசப்பட்டு நிறை முறையின்றி ஒழுகும் உலகினர்க்குப் பிணி மூப்புச் சாக்காடுகளை காமம் வழங்குகின்றது என்க. உலகியல் இதுவே ஆம்.

"ஆவதும் அழிவதும் ஒன்றினாலே"

என்னும் சித்தர் திருவாக்கின் உண்மையும் இதுவே ஆம். உலகியலாகிய

பிரவிருத்திக்கும் நிவிர்த்திக்கும் நெறி ஒன்றே. நிறை பேதமே — ஒழுக்க முறை பேதமே இரண்டற்கும் இடையீடு என்க.

மேலே கூறிய கற்றல் என்னும் பயில்வால் உடலுயிர் தூய்மையடையப் பெற்றவரே மெய்யடியார் எனப்படுவர். இவரே இயற்கை நிட்டையாகிய சகச நிட்டை உடையவர்.

சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளாகிய செயற்கை நிட்டைகளால் — போலி நிட்டைகளால் பிரமையடையும் உலக மாக்கள் இயற்கை நிட்டையாகிய சகச நிட்டையின் இலக்கணத்தை அறிவது முடியாத காரியமே.

திருவாசகத் திருவண்டப்பகுதி அகவலில் போலி நிட்டைகளால் இறைவன் திருவடி கண்டு உய்தியடைதல் — புருஷார்த்தங்களை அடைதல் முற்றுக முடியாத காரியம் என அந் நிட்டைகளைக் கண்டித்து,

சகச நிட்டையின் அருமை பெருமையையும் அதனாற்றான் உடலுயிர் அமலம் அடைந்து நித்தியத்துவம் பெறும் என்பதனையும் வெள்ளிடைமலைபோல விளக்கிக் காட்டியருளினார் மணிவாசகப் பிரபு.

(ஷை அகவல்அடி 115—182.)

குரு வருளால் கற்றல் என்னும் பயில்வு அமையப் பெறாமையால் இருவினையொப்பு மல பரிபாகம் கைவரப் பெறாத மருளுடம் பினராய் வாயோடு கண் மூடி அசுத்த நாதங்களைக் கேட்டு மயக்க முற்று வதியும் சவிகற்ப நிர் விகற்ப நிட்டையாளர் தம்முள்ளே வாலறிவன் நற்றாள் கண்டு தொழ மாட்டாராய் இறந்து பிறவி வலைப்படுபவரே என்பதும்,

இயற்கை நிட்டையாகிய சகச நிட்டையின் இலக்கணமும் பயனும் அஃதாவது சகச நிட்டையாளரே அமல நாதங்களைக் கேட்டு — அருளமுதம் அருந்தித் தமது உடலுயிர் பூரணமாக அமல மடையப் பெற்று அருளாய் வெளியாய் மறைந்து மீண்டு வாரா நிலையை அடைபவர் என்பதும்

"யோகம்" "சகசநிட்டை" 'சமாதி' முதலிய கட்டுரைகளில் ("வித்தகம்" தொகுதி1 இல. 32, 36, 40) விரிவுற விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

உடலுயிர் என விளங்கும் சத்தசைவாகிய தீ சித்தசைவாகிய தீ என்னும் இரண்டும் கற்றல் என்னும் பயில்வால் சமநிறை பெறுதற் கண் உளதாகும் மூன்றாவது தீயாகிய முத்தீ—முத்தி என்பதன் இலக்கணமும் அவ் அகண்டாகார அமல ஒளியாகிய அருட் பெருஞ் சோதி உடலகத்து ஆக்க முற்றுப் பூரணப்படும் பெற்றியும் "வீடு பேறு நில்" என்னுங் கட்டுரையில் ("வித்தகம்" தொகுதி 1 இல. 47) மிக நுட்பமாக விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

உடல் சத்துக் கெட்டுப் பிணமாகுமாயின் முத்தி என்பது முயற் கொம்பே ஆகும். இவ் வுண்மை "வித்தக" சஞ்சிகைகள் பலவற்றில் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு நன்று விளக்கி நிறுவப்பட்டது.

உடலகத்து வித்தாயும் கடையாயும் உள்ளாயும் (கடை + உள் — கடவுள்) விளங்கும் விந்து தூய்மை அடைந்து உடலகத்து உறைதலாற்றான் சிவாகம் தலைப்படும் — சிவ மாதல்கை கூடும்—உடலுயிர் அமல மடையும் —வாய்மையான சித்திகள் உண்டாகும். (திருமந்திரம் விந்துசயம் — போகசர ஒட்டம் 12—15; 20, 26 — 29; 33)

விந்துவே ஓஜம் ஆவது. இதினின்றே (ஓ + ஜம்) ஓ வடிவம் என்னும் பிரணவ வடிவம் ஆக்க முறுவது. இதுவே சீவன் முத்தர் வடிவம். இவ் வடிவமே ஞானாகாசத்தில் ஒடுங்குவது.

கள் வொழுக்கம் என்னும் சிற்றின்பப் பயில்வினாற்றான் விந்து தூய்மை அடைந்து உடலகத்து உறையும் — ஓஜமாக மாற்ற மடையும்.

இது பற்றியே, விந்து உடலில் ஒழிவற ஒன்றப் பெறாது —விந்துவில் உதிக்கும் வாயு அதன் கண் ஒடுங்கி அதனோடு உடலில் உறையப் பெறாது (உடலும் உயிரும் ஒழிவற ஒன்றப் பெறாது) அவ் விந்து அதன் கண் உள்ள வாயுவோடு அவ் உடலை விட்டுப் பிரியுமாயின்—மரணம் ஏற்படுமாயின் முத்தி என்பது முயற்கொம்பே என்று கூறப்பட்டது.

விந்து என்னும் வேர் அற்றால் உடனே — அந்த க்ஷணமே உடல் பிணமாகும். விந்து என்னும் சத்து உடலை விட்டுப் பிரிதலே சத்துப் போதல் — செத்துப் போதல் எனப்படுவது.

விந்துவின் இயக்கமே வாயு எனப்படுவது. அதுவே சத்தி —கால்—ஒலி—நாதம்—இயக்கம் என்பது. இவ் வாயு என்னும் கால் — நாதம் — ஒலிக்கும் நாதம் சரீரத்தில் உறைய உறைய — ஒடுங்க ஒடுங்கச் சரீரம் மாற்றமடையும் — அசுத்தம் நீங்கி அமலமடையும்.

காலம் என்னும் காலனைக் கால் என்னும் காலால் உதைத்தல் என்பதன் உண்மையும் இதுவே ஆம்.

நாதம் என்னும் ஒலி முற்றுக ஆக்க முற்று ஒடுங்கிய போது நாத சரீரம் உளதாகும். விந்துவின் இயக்கமே நாதம் ஆதலால் உடல் நாத சரீரமான போது விந்து என்றும் நாத மென்றும் பிரித்துக் கூற இடமாகாது ஏகபாவமாகும்—ஒன்றாகும் என்பது. உடலும் உயிரும் ஒழிவற ஒன்றுதல் என்பதன் உண்மையும் இதுவே ஆம்.

இவ்வாறு கால் என்னும் சத்தி பிருதிவி அம்சமாகிய உடலிற்பதிதலே அருட் சத்தி பதிதல் என்பது—சத்தி நிபாதம் என்பது — ஞான சத்தி வடிவம் ஆக்க முறுதல் என்பது.

இப் பெற்றி கை கூடப்பெற்றால் குறை ஏது? குற்றம் ஏது? பிணி ஏது? மூப்பு ஏது? சாக்காடு ஏது?

மேலே கூறிய இயற்கை முறையான சாதகங்களாற்றான் உடலுயிர் இயக்க நிறை சமம் பெறுதலாகிய வாய்மையான இரு வினையொப்பும் மல பரிபாகமும் சத்தி நிபாதமும் கை கூட வேண்டும். இப் பெற்றி கை கூடுதல் என்றால் எளிதின் முடியுமா?

உலகில் சைவர் எனப் படுவோர் — வேதாந்திகள் சித்தாந்திகள் (வாய்மை

யான வேதாந்த சித்தாந்த இலக்கணம் "வித்தகம்" தொகுதி 2 இல. 9 இல் விளக்கிக் கூறப்பட்டது) எனப் படுவோர் பலரால் கைக்கொள்ளப்படுவனவும் சாத்திர நிபுணர் சிலரால் தமது படிப்பு வல்லபத்தால் வேதாகம சாரமெனக் கண்டு பிடிக்கப் பட்டனவுமாகிய சில சரியை கிரியைகளால் அசட்டு யோகங்களால்—நடை நொடி சாடைகளால் முடிவ தாகுமா?

வாய்மையான இருவினை ஒப்பு மல பரிபாகம் சத்தி நிபாதம் என்பனவற்றின் இலக்கணம் குருவருளானன்றிச் சாத்திரங்கள் என வழங்கும் ஏடுகளால் அறியப்படுவன ஆகா. இவை படிப்பு வல்லபத்துக்கு எட்டாதனவே.

இவற்றின் இலக்கணம் பொதுவாக "வித்தக" வாயிலாக வெளி வந்த கட்டுரைகள் பலவற்றிலும் சிறப்பாக "வித்தகம்" தொகுதி 2 இல. 11, 12 இலும் தொகுதி 1 இல. 35 இலும் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு தொகை வகை விரியான் இனிது விளக்கிக் கூறப்பட்டுள்ளன. ஆங்காங்குக் கண்டு தெளிக.

வாய்மையான இருவினை ஒப்பு மல பரிபாகம் சத்தி நிபாதம் என்பனவற்றின் இலக்கணம் பன்னெடுங் காலமாகப் பலர்க்கும் மறை பொருளாயினமையே, உண்மைச் சைவ முத்தி நிலை மறை பொருளாய் அதன் அருமை பெருமைகளை உலகோர் அறிய முடியாமைக்கு முக்கிய காரணமாயிற்று என்பது மிகையன்று.

மேலே கூறிய இயற்கை முறையான சாதகங்களாற்றான் உடலுயிர் அமலமாக விளைவேற வேண்டும். இதற்குச் சூக்குமம் விளைவேறி உரிய நிறையைப் பெற வேண்டும்.

சூக்குமம் என்றால் தூலத்தின் வேறானதும் தூலம் சத்துக் கெட்டுப் பிணமான பின் அதனைப் பிரிந்து உயிரோடு வேறாக நிற்கக் கூடியதும் போக்கு வரவு புரியக் கூடியதுமான தோர் நுண்ணுடம்பு என்பர் சாத்திரநிபுணர் பலர்.

ஆனால் வேத நூல்கள் இவ்வாறு கூற வில்லை. ("வித்தகம்" தொகுதி 1 இல. 45 இல் காண்க.) தூல சூக்குமங்கள் அந்நியோந்நிய சம்பந்தமுடையன என்பதும் தூலம் பழுதடையுமாயின் சூக்குமமும் பழுதடைந்து அத் தூலத்துடன் ஒருங்கே அழியுமன்றி அத் தூலத்தை விட்டு வேறாக நிற்க மாட்டாது என்பதும் சாந்தோக்கியம் பிருகதாரண்யம் முதலிய முக்கியமான உபநிடதங்களால் நன்று வலியுறுத்தப்பட்டன. விரிப்பிற் பெருகும்.

வாய்மையில் சூக்குமம் என்பது தூலத்தை அமல விளைவேற்றுதலால் உளதாவது. அஃதாவது தூலமே சூக்குமமாக வேண்டும். இதுவே ஓ வடிவம் என்னும் பிரணவ சரீரம். இதுவே ஊனம் அறவே ஒழிந்த வடிவம்; சீவன் முத்தி நிலை பூரணப் பட்டவர்க்குரிய அமல வடிவம் எனப் படுவது.

இதுவே சதாசிவ வடிவம்-சாதாக்கிய வடிவம்—அருவுருவத் திருமேனி. இது பரிசனத்துக்குப் புலப்படாது; தரிசனத்துக்கே புலப்படும்.

'நந்தியருளாலே சதாசிவனாயினேன்"

என்றனர் அண்ணல் திருமூலர்.

"ஈனமற்றகாயமாய் இருப்பனெங்கள்
[ஈசனே'

என்றனர் சிவவாக்கியர்.

## திருமந்திரம்.

தானவ னாகுஞ் சமாதிகை கூடினால்
ஆன மலமறு மப்பசுத் தன்மைபோம்
ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்து
ஊனங்கள் எட்டு மொழித்தொன்று வோர்
[கட்கே.

(டி 8-ம் தந். 3வது அவத்தை பேதம்
[11-வது. நின்மலாவத்தை மந்.17)

[ஈனமில் காயம்—பிரணவ வடிவம். ஒன்றுவோர் — ஞானாகாசத்தில் ஒடுங்குவோர். இதன் பொருள் "வித்தக" சஞ்சிகைகள் பலவற்றில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. ஆங்காங்குக் கண்டு தெளிக.]

எனவும்,

ஆமா றிற்சிவ னாருள் பெற்றுளோர்
போமலந் தன்னாற் புகழ்விந்து நாதம்
[விட்டு)
ஓமய மாகி ஒடுங்கலி னின்மலந்
தோமறு சுத்தா வவத்தைத் தொழிலே.

(டி 8-ம் தந். 3வது அவத்தைபேதம் 5 வது
[கேவல சகலசுத்தம் மந் 7)

எனவும் உரூஉம் அண்ணல் திருவாக்குக்களையும் நோக்குக.

சூக்குமம் என்றால் தாதுக்கள் எனப்படும். தாது என்றால் சத்து என்ப. இதனுள் யாவும் அடக்கம். தத்துவம் முப்பத்தாறும் அடக்கம்.

'முத்தர் தம் முத்தி முதல் முப்பத்தாறே"

என்றனர் அண்ணல் திருமூலர்.

"...............................................
அவை யெல்லாம் ஆனது விந்து"

என்றனர் பாட்டி. (ஔவைகுறள்)

உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலும் சத்து உண்டு. சத்தில்லாத பொருள் இல்லை. சத்தே ரஸம். ரஸமே பிரமம். இதினின்றே தூல சூக்குமங்கள் விரிந்தன ஆகும்.

இத்தகைய விந்தை அமல மாக்குவதே சூக்குமத்தை விளைவேற்றல் என்பது.

சூக்கும இயல்பு அறியாதார் உண்மை முத்தியின் இலக்கணத்தை அறிவதும் — ஒப்புக் கொள்வதும் முடியாத காரியமே. இதனாற்றான் முத்தி நிலை மறை பொருளாயிற்று.

இன்ன பண்புடைய சூக்குமம் தடித்து—மதத்து சத்துவ நிறையின் ஏற்ற பெற்றியால் அமலத் தடிப்புற்று மிளிர்வது என்றால் அதன் அருமை பெருமையும் அதனால் ஆம் ஒருமையும் யாரால் இயம்ப முடியும்? அறிய

முடியும்? இவை சீவர்கள் சிந்தனை சொற் செயல்களுக்கு அளவு படுவன ஆகுமா? படிப்பு வல்லபத்துக்கு எட்டுமா? எம் பெருமானாகிய ஆசானே இவற்றை அறிய வல்லனவன்.

ஆசானை அடைவது என்றால் அதற்குரிய பக்குவம் வேண்டும். பக்குவம் பெற என்றாலோ அதற்குரிய கிரியைகள் கர்மங்கள் உஞற்றப்பட வேண்டும். கிரியைகள் புரியப்படுவ தென்றால் பல கோடி சென்ம நற்றவம் வேண்டும்.

எம்போலிய சாமானிய சீவர்களுக்கு இது ஒவ்வுமோ? ஒவ்வாது. இதனால் தற்கால உலகம் இவ் வுண்மைகளை அறிவதும், ஒருகால் தெய்வாதீனமாய் ஒருவர் ஒரு சிறிது அறிந்து கூறினும், இவற்றை ஒப்புக் கொள்வதும் முடியாத காரியம் ஆகின்றது.

அநாதியான உண்மைச் சைவக் கொள்கையாகிய இன்னோரன்ன அதி சூஷ்மமான — மறை பொருளான — நுட்பத்திலும் அதி நுட்பமான விஷயங்களை — வேத வுண்மைகளை, திரை என்னும் அஞ்ஞான மறைப்பு நீங்கப் பெறாத எம் போலிய மாக்களாகிய முட்டைகள் படிப்பு வல்லபத்தால் அறிந்து விட முடியுமா?

திரை என்னும் அஞ்ஞான மறைப்பு நீங்கினாலன்றி—மறைக் காட்டுக் கதவம் திறக்கப் பட்டாலன்றி ("வித்தகம் தொகுதி 2 இல. 22 இல் காண்க.) உண்மைகளைப் பூரணமாக அறிதலும் உடலுயிர் அமல மடைந்து நித்தியத்துவம் பெறுதலும் முடியாத காரியமே ஆகும்.

உடலுயிர் அமல மடைதலே — புலால் திருத்தி பூந் திருத்தியாக மாற்றமடைதலே மாற்றிப் பிறத்தலாகிய துவிஜத்துவமாகும். மாற்றிப் பிறவாதார்க்கு முத்தி என்பது முயற் கொம்பே ஆகும்.

வாய்மையான துவிஜத்துவத்தின் இலக்கணமும் தற்காலத்தவர் பலர்க்கு மறை பொருளே ஆயிற்று. (வித்தகம் தொகுதி 1 இல. 38, 49 இல் காண்க.)

துவிஜத்துவத்தின் இலக்கணம் அறியாதார் உண்மைச் சைவமுத்தியின் இலக்கணத்தை அறிவதும் அதனை ஒப்புக் கொள்வதும் முடியாத காரியமே.

இவ் உண்மைகளை அறியாதவரே "தூலம் எவ்வாறு அருவமாகி ஞானாகாசத்தில் மறையும்? மாயை அருள் வடிவாக மாற்ற மடையுமா? இது அசம்பாவிதம் அல்லவா?" எனக் கடாவி, தூலம் பிணமாகி விழச் செத்துப் போவது தான் சுலபமான முத்தி நெறி என ஓல மிட்டு அமைகின்றனர்.

இது விதியை வெல்லும் வகையறியாது அவ்விதி என்னும் மாயை வலைப்பட்டு மாண்டு பிறவி வலைப்படும் அறிவிலிகள் கூற்றே யன்றி வேறன்று.

## ஔவையார் மூதுரை.

———

"மெய்விண்ணுறுவார்க்கில்லைவிதி"

என்றனளே ஆதி சத்தியின் அவதாரம் எனப் போற்றப்படும் ஔவை! அம்மையார் அநுபவத் திருவாக்கு அல்லவா இது?

மேய் என்னும் சத்தி வடிவான உடல் தன்பெயர்க் காரணம் நன்று புலப்படும் வண்ணம் அமல மடைந்து ஞானாகாசமாகிய விண்ணில் ஒடுங்குவதால் நித்தியத்துவம் பெறும் தத்துவப் பெரியாரே விதியை — மாயையை— காலனை வென்ற வராவர். ஏனையோர் விதியை வெல்ல முடியாதவரே—விதி வசப்பட்டு மரணமடைந்து பிறவி வலைப்படுபவரே ஆவர்.

தூலம் எவ்வாறு அருவமாகி மறையும்? எனின், சிறிது கூறுதும்:—

மேலே கூறிய சாதகங்களால் தாதுக்கள் நிறை பெறுதற் குரிய சூக்குமப் பயில்வுகளால்—அருந்தல் பொருந்தல் அனந்தல் என்னும் தூலப் பயில்வுகளால் —மௌன மந்திராதிக்ய வித்தை என்னும் மந்திர ஒலி ஆவியின் மகத்தான பஞ்சீகரணப் பேற்றியால் — சூக்கும கர்பமாகிய மந்திர ஒலி ஆவியின் பரிசத்தால் ஆக்க முறும் அமல நிறையானது தாதுக்களில் பஞ்சீகரணிக்கப்படும் நிறைக்கு ஏற்ப,

அசுத்த சத்தானது சுத்த சத்தாகத் திரிந்து ஆரோகணத் தவப் பேறானது நிறை கொண்டு கதிக்கும் தகைமையினால் தூலம் அணு அணுவாக ஊனம் நீங்கி—பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி ஒளி மயமாய் அருவமாகிக் கரையும்; கரைந்து பல்லோரும் கண்டு போற்றும் படி சிதாகாசப் பெரு வெளியில் மறையும் என்பது உணர்ந்து கொள்ளற்பாலதே!

[திருமந்திரம் விசுவக்கிராசம் மந்திரம் 1 — 8இலும், திருவாசகம் சிவபுராணம், திருவண்டப்பகுதி முதலிய வற்றிலும், சுத்த சாதகம் செ. 18, 19, 21, 22, 32, 63 இலும், இதுவரை வித்தக வாயிலாக வெளி வந்த பிரபல சுருதிப் பிரமாணங்கள் பல வற்றிலும் கண்டு கொள்க.]

## திருமந்திரம்.

———

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற் கற்பூரத்தை யொக்கப்
பொழிகின்ற விவ்வுடற் போமப் பரத்தே.

(ஷை 8-ம். தந்.விசுவக்கிராசம் ம 1.)

என உண்மைச் சைவ முத்தியின் இலக்கணம் வரை யறுத்து உரைத் தருளினார் வாய்மையான உலக குரவராகி (ஜகத்குரு) வதிந்து, ஞானாகாசத்தில் மறைந்தருளிய எம் அண்ணல் திருமூலர்.

நீர்க் குமிழி யானது நீரிலே தோன்றி அதனுள் மறைந்து தன் சொரூபம் கெட்டதுபோல, சரீரத்தாலான நிழற் சாயை யானது அச் சரீரத்தின் வேறாகத் தோன்றாவ தென்பதழிந்து அச் சரீரத்தோடு உறவு செய்து அச் சாயை என்னும நாமமும் ரூபமும் அழிந்த போது,

கொளுத்தப் பட்ட தீக் கொழுந்தினால் கர்ப்பூர மானது தன் இருப்புச் சிறிதும இன்றி முற்றாகக் கரைந்து ஒடுங்குவது போல,

அருட் சோதியால் விழுங்கப் பட்டு அருளாகிக் கரைதலால் அருளொளியைப் பொழிகின்ற இத்தகைய அமல வடிவம் (பிரணவதநு) ஞானகாசத்தில் ஒடுங்கும் என்பது இதன் பொருளாகும்.

நீரில் கழிகின்ற குமிழியைப் போல அழிகின்ற சாயா புருடனைக் காணில் என இயையும்.

பொழிதல். —அருளொளியைக் காலுதல்; கரைதல் எனினும் ஆம்.

இருள் மருளிலும் மருள் ஒ வடிவமாகிய தெருளிலும் (ஞானசத்தி வடிவம்) தெருள் அருளிலும் அருள் ஞானகாசத்திலும் ஒடுங்கிச் சத்தி வடிவாகித் திகழும் என அறிக.

ஞானகாசமே சத்தி எனவும் பிரமம் எனவும் சுருதி கூறிற்று. (சாந்தோக்கிய உபநிடதம் 4.10.5)

## முத்துத்தாண்டவர் பாடல்.

———

"மாணிக்கவாசகர்பேறெனக்குத்தர
[வல்லாயோ அறியேன்
..............................
கற்பூரதீபம்போல்என்தன்உடலைக்
கனகசபையிற்கலந்துகொள்வாயே".

என எமது முத்துத் தாண்டவப் பெருமானும் உடல் கற்பூர வண்ணமாய் அமல மடைந்து அருட் பெருஞ் சோதியால் விழுங்கப்பட்டு அருவமாய் ஞானகாசத்தில் மறைதலே உண்மை முத்தி நிலை என வெள்ளிடை போலக் கூறியருளியதும் அறிக.

"அப்பர் சிவலிங்கத் துற்றனர் என்றும்
ஆரூரர் வெண்கரி யேறினர் என்றும்
செப்பரிய திருஞான சம்பந்தர்
தேசுடன் சென்றார் என்றும்
இப்படி என்னை அலைத்து விடாதே
எம்மான் இருந்தபடியே இருந்திட
.............................................."

எனச் சமய குரவர் மூவர் முத்தி நிலையைக் குறித்து இகழ்ச்சி தோன்றக் கூறினார் முத்துத்தாண்டவர் எனக் கருதுவார் பலர்.

"என்றும்" "என்றும்" "என்றும்" எனப் பிறர் கூற்றாகக் கூறி இதனை மறுத்து அஃதாவது உலகோர் அறியாமையால் இவ்வாறு கூறுகின்றார் என இக் கூற்றுக்களை மறுத்து,

ஞானகாசத்தில் அருவமாய் மறைதலே உண்மை முத்தி என விளக்கிக் காட்டுபவராய்

"மாணிக்க வாசகர்பேறெனக்குத் தர
[வல்லாயோ"

என உண்மையை உரைத்தவரே யன்றி வேறன்று.

சமய குரவர் மூவரும் அருவமாய் ஞானகாசத்தில் மறைந்தவர் என்பதே இவர் தம் கண்ணியம் வாய்ந்த திருவுள்ளக் கிடக்கையும் உண்மையும் ஆகும்.

முத்தி இலக்கணம் அறியாத உலகோர் பலர் உள்ளத்தில் அப்பர் ஆலயத்துள்ளே புகுந்தனர் என்றும்,

ஞான சம்பந்தர் உருவமாகப் புறம்பே காணப்பட்ட சோதிக்குட் புகுந்தனர் என்றும்,

சுந்தரர் ஆனையில் ஏறிக் கயிலை என்னும் ஒரு மலைக்கோ ஊருக்கோ சென்றனர் என்றும் விபரீத மான துணிபு வேரூன்றி விட்டமையால் அதனையே மறுத்து உண்மையை நிறுவினார் எமது தாண்டவப் பெருமான் என அறிதற்பாற்று.

முத்துத் தாண்டவப் பெருமான் பல்லோரும் கண்டு போற்றக் கனக சபையில் —பொன்னம்பலத்தில்— ஞானகாசத்தில் மறைந்து உண்மை முத்தியடைந்த தத்துவப் பெரியாரே எனினும்,

அவர் காலம் நம்பியாண்டார் நம்பி காலத்துக்கும் பெண்ணாடம் மெய்கண்டார் காலத்துக்கும் பிற்பட்ட காலமாதலால் —உடல் பிணமாகி விழச் செத்துப்போதலே முத்தி என்னும் கொள்கை வேரூன்றிய காலமாதலால்,

அவரைப் போற்றுவோரும் அவர் அருள் வாக்கை அநுசரிப்பாரும் மிகச் சிலரே ஆயினர்.

"கட்டையில்வைத்துச்சுட்டுவிடாதே
கள்ளக்குழியில்புதைத்துவிடாதே"

(ஷை கீர்த்தனம்)

என உடல் பிணமாகி விழச் செத்துப் போதலாகிய அவ நெறியை —சிவ நெறிக்கு மாறுபட்ட சவ நெறியைப் பிறவி நெறியே என அவர் கண்டித்து ஒதுக்கியமையும் அறிக.

"உற்ற ஆக்கையின் உறுபொருள்" (திருவாசகம்) ஆகிய அகண்டாகார அமல சொரூபம் உரிய சாதகங்களால் உடலகத்து ஆக்க முற்ற போது,

அவ் அருட் பெருஞ் சோதி தன்னை விழுங்கி (அவ் உடலுயிரை விழுங்கித்) தான் என்பது முற்றாக அறச் செய்து —ஊனத்தை அறவே ஒழித்துப் நிற்பதே பூரணப்பட்ட நிலையாகும்.

இதனைத் தான் "ஜோதி" "ஜோதி" என்று வேதாகம புராணேதிகாசங்கள் முழங்குவன ஆகும்.

இதற்கு அப்பால் அருவமாய் ஞானகாசத்தில் மறைதல் சொல்லாமலே அமையும் ஆதலால் வெளிப்படையாகக் கூற வேண்டிய தில்லை. கூறுதற்கு அதிகாரம் இல்லை; கூற முடியாது என்பது.

மாயை என்னும் விதி வசப்பட்டு மாண்டு போகாது —உடலை விட்டு உயிர் பிரியாது —மரண மடையாது மாயையைக் கடந்து — விதியை வென்று பிரமமாதலே—சிவமாதலே —சிவாங்கமாதலே முத்தி என வேத நூல்களால் கூறப்பட்டுழி,

பிரமத்தின் இலக்கணம் —பிரமமாதல் சிவமாதல் என்பதன் இலக்கணம் இன்னது என அறிவார்ப் பெறின்,

உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி அமல மடைந்து பிரம சொரூபமாகிய ஞானகாசத்தில் ஒடுங்கிச் சிவமாதலே முத்தி என்பது உள்ளங்கை நெல்லி என விளக்கம் பெறும் அல்லவா?

உடலை விட்டு உயிர் பிரியாது (ஒழிவற ஒன்றி) பிரமமாதலேமுத்தி என்று ப்ருகதாரண்ய உபநிடதம் கூறுகின்றது (4.4.6) வித்தகம் தொகுதி 3இல 43 இல் காண்க.

ஸ்ரீ வால்மீக ராமாயணத்திலும் இம்முத்தி நிலை வெள்ளிடை மலை போலக் கூறப்பட்டுள்ளதென்பது பின் வரும் சுலோகங்களால் நன்று வலியுகின்றது.

ராமாயணம்.

———

உத்தர காண்டம் சர்க்கம் 110.
சுலோகம் 12.

பிதாமஹவச: ச்றுத்வா விநிச்சித்ய மஹா
[மதி |
விவேச வைஷ்ணவம் தேஜ: ஸசரீர:
[ஸஹாநுஜ: ||

பிரமன் வார்த்தையைக் கேட்டுச் சிந்தித்து மதி பூரணப் பட்டவனாகிய ஸ்ரீராமபிரான் பரத சத்ருக்நர் என்னும் தனது தம்பியரோடு (அமலமான) உடலோடு சர்வ வியாபகமான ஒளியில் புகுந்தார்என்பதுஇதன்பொருளாகும்.

ஸ்ரீராமரும் பரத சத்ருக்நரும் அருவமாய் ஞானகாசத்தில் மறைந்தனர் என்பது "கருத்து"

"வைஷ்ணவம் தேஜ:

என்பதற்கு

"ஸர்வ வியாபியான ஒளியில்"

என்று வியாக்கியான கர்த்தரால் பொருள் கூறப்பட்டது.

இவ் ஒளி அருவமானதே — பிரம சொரூபம்ம ஆகும். மதி பூரணப்பட்டவன் எனவே உடலுயிர் அமல மடைந்தமை நன்று பெறப்படும்.

ஈண்டு உரையாசிரியர் மருளுடம்பு அமல மடைதலைக் குறித்துச் சிறிது கூறுகின்றார்.

ஷை சர்க்கம்.106 சுலோகம் 17.—

அத்ருச்யம்ஸர்வமநுஜை:
[ஸசரீரம்மஹாபலம் ||
ப்ரக்ருஹ்யலக்ஷ்மணம்சக்ர:த்ரிதிவம்
[ஸந்நிவேசஹ ||

இலக்குமணர் பல்லோர் முன்னிலையில் (வெகு ஜன சமுகத்தில்) மஹாபல முடைய அமல உடலோடு அருவமாக விண்ணில் மறையும் அவசரத்து அவரை இந்திரன் எதிர்ப்பட்டுத் தன் விமானத்தில் ஏற்றி அவரைச்சுவர்க்கத்தில் சேர்ப்பித்தான்என்று இச்சுலோகத்துக்குப் பொருள் கூறப்படுகின்றது.

இல்க்குமணர் அமல உடலோடு உலகு கண்டு போற்ற ஞானகாசத்தில் மறைந்தனர் என்பதே இதன் உண்மையாகும். இந்திர விமானம் என்பது தூய்மை அடைந்த உடலையே குறிப்பதாகும்.

எம் பெருமான் குடி புகப் பெற்ற மெய்யடியார் தூய தநுவே விழுமிய விமாணமாகும் — இந்திர விமானமாகும் என்பது.

திருவிசைப்பா.

———

"..................................அடியேன்
வினைபடும்உடல்நீபுகுந்தநின்றமையால்
விழுமியவிமான்மாயினதே"

என்னும் கருவூரார் அநுபவத் திருவாக்கால் நன்று வலியுறுதல் காண்க. மஹா பாரதம் உத்தியோக பருவத்தில், 40—45 ம் அத்தியாயங்கள்

"ஸனத் ஸுஜாதீயம்"

எனப் பெயர் பெறும்.

இதன் கண் 43வது அத்தியாயத்துள்ள பின்வரும் சுலோகங்கள் உடலை விட்டு உயிர் பிரியாது அவை அமல மடைந்து ஒடுங்குதலே உண்மை முத்தி என்பதனை நன்று வலியுறுத்துகின்றன.

"சரீரமேதௌகுருத: பிதாமாதாசபாரத
ஆசார்யசாஸ்தாயாஜாதி: ஸாபுண்யாஸா
[ஜராமரா ||

ஹே! பரத வம்சத்தினரே! அன்னையும் பிதாவும்சேர்ந்துஇந்தச்சரீரத்தை ஆக்குகிறார்கள். குரு நெறி கடைப்பிடிப்பதனால் ஆக்கமுறும் சீடனின் மறு பிறப்பாகிய உடம்பே (அமல தநுவே) புனிதமுடையது திரையற்றது மரணமற்றது என்பது இதன் பொருளாகும்.

திரை அற்றது எனவே நரை பிணி மூப்புக்கள் அற்றமையும் சொல்லப்பட்டதாகும்.

சுந்தரர் தேவாரம்.

———

"..............................................
நரைப்புமூப்பொடுநடலையுமின்றி
நாதன்சேவடிநண்ணுவர்தாமே."

(ஷை திருவிடை மருதூர் பண்-தக்கதேசி
[பாசுரம். 10)

என தம்பிரான் தோழர் அருளியதும் அறிக.

ஆகவே உடலை விட்டு உயிர் பிரியாது அவை ஒழிவற ஒன்றி அடைபப்படுவதே நித்தியத்துவம் என வற்புறுத்தப்பட்டதாயிற்று.

ய:ஆச்ரயேத்பாவயேச்சாபிராஜந்ஸர்வம்சரீ
[ரம்தபஸாதப்தமாந: |
ஏதேநவைபால்யம்அப்யேதிவித்வாந்ம்
[ருத்யும்ததாஸ:ஜயத்யந்தகாலே ||

ஹே! மன்னனே! எவன் ஒருவன் தனது சரீரத்தை ஏற்ற தவத்தினால் வாட்டித் துகளறச் செய்தாலும் (அசுத்த நிறையை ஒழித்தல்) அகிலத்தையும் சரீரம் முழுமையும் தனக்கு அடைக்கலமாக அடுத்து அமல மாக்குகிறானோ அப்பேரறிஞன் இச் செயலால் நிச்சயமாய் இளமைப் பருவத்துக்கு நிகரான சரீர நிலையைப் பெறுவதுடன் இறுதியில் கூற்றையும் ஒழிப்பான் (மரணம் அடைய மாட்டான்) என்பது இதன் பொருளாகும்.

["ந" என்பது ஈண்டு எதிர் மறையை உணர்த்துவதன்று. "நபால்யம்" என்பது ஈண்டு இளமைப் பருவத்துக்கு ஒப்பான உடலம் உடைமை எனப் பொருள்படும், "பாலனுமாவன் பரா நந்தி ஆணையே" என எம் அண்ணல் திருமூலர் அருளியதும் அறிக. (திருமந்திரம்) மணம் கமழ் தெய்வத்து இள நலத்தையே இது

குறித்ததாகும் "நபால்யம்" இப்பொருட்டாதல் வேத வழக்கு என்ப. வியாக்கியான கர்த்தாவாகிய ஆசாரிய சுவாமிகள் கருத்தும் இதுவே ஆம்.]

இச்சுலோகத்துக்கு வியாக்கியானம் செய்தருளிய ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் வாக்கும் உடலை விட்டு உயிர் பிரியாது அவை ஒழிவற ஒன்றி அடையப்படுவதே முத்தி என்பதை நன்று வலியுறுத்துதல் காண்க.

அவ்வாக்யம் வருமாறு: —

"இஹ அஸ்மின் ஏவதே ஹே ஆத்மா நரிஷ்யதே நவி நச் யதிவிதுஷ உத்க்ராந்தோ பாவாத் உத்க்ராந்தி நிமித்தத்வாத் விநரசஸ்ய" ||

இப் புவியின் கண் இப்பொழுது எடுத்த சரீரத்திலேயே பேரறிஞனை புருடன் சாவுக்கான துன்பத்தை அநுபவிப்பதும் இல்லை; அழிந்து போவதும் இல்லை. ஏனெனில், உள்ளதை விண்ட (உள்ளதை அறிந்த — விண்ட பேரறிஞன்—விதுஷ:) பேரறிஞனுக்கு சாக்காடு இல்லை. உடலம் அழிதற்குக் காரணம் அவ் உடலை விட்டு உயிர் பிரிதலே — மரணமே என்பது இதன் பொருளாகும்.

இவ்வாறு உடலுயிர் ஒழிவற ஒன்றி அமல மடைந்து ஞானகாசத்தில் ஒடுங்குதலே உண்மை முத்தி என்பதனை நன்று வலியுறுத்துவனவாய் வேதம் உபநிடதம் ஆகமம் புராணம் இதிகாசம்எனவழங்கும் நூல்களிலும்,

திருவாசகம், திருக்கோவை, தேவாரம், திருமந்திரம், திருவாய்மொழி, ஔவைகுறள். தேவர்குறள், முதலிய தமிழ் மறைகளிலும்,

வாய்மையான சித்தர் நூல்கள் என வழங்குவனவற்றிலும்,

ஞானவாசிட்டம், சூதசங்கிதை, சுத்தசாதகம், சித்தாந்த சிகாமணி, முதலிய வற்றிலும் உள்ள பிரபல பிரமாணங்கள் பல மூவாண்டுகளாக வெளிவந்த "வித்தக" சங்கிகைகளில் எடுத்துக் காட்டிவிளக்கப்பட்டுள்ளன. ஆங்காங்குக் கண்டு தெளிக. ஈண்டு எடுத்துக் காட்டப்படின் மிகப் பரக்கும்.

இம் மூன்றாவது ஆண்டில் வெளிவந்த "வித்தக" சங்கிகைகளில் வாய்மையான வித்துவப் பெரியாரும் நித்தியத்துவம் பெற்ற தத்துவப் பெரியாருமாகிய இடைக் காடர் என்னும் சித்தர் பெருமான்

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"

என்றவாறு சீவகாருண்ணிய மிகுதியால் உலகோர் உண்மையை உணர்ந்து கடைத்தேறும் வண்ணம் அருளிச் செய்த "மூவடி முப்பது" என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் உள்ள சூக்தங்களின் அதிகுஹ்யமான உண்மைப் பொருளே அவற்றின் மகுடங்களைப் பீடிகையாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகள் பலவற்றால் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு முக்கியமாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

சத்திய நெறியாகிய உண்மைச் சைவக் கொள்கைகள் மறை பொருளான தற்காலத்தில்சேமநிதி எனக்கிடைக்கப் பெற்ற உலவாக்கிழி அனைய இத் தெய்வத் தமிழ் மறையானது,

உண்மை முத்தி நிலையையும் அதற்குரிய இயற்கை முறையான சாதகங்களையும் அவற்றை அநுட்டித்துச் செல்லும் படியேற்ற முறைக்கண் உளவாகும் அநுபவத் திறன்களையும் முக்கியமான அம்சங்களால் சுருங்கக் கூறி விளங்க வைக்கின்றதென்பது ஷை கட்டுரைகளைக் காய்தல் உவத்தல் அகற்றி உண்மையை நாடும் ஆர்வத்தோடு படித்துணர்வோர்க்கு எளிதிற் புலப்படாததாகுமா? ஆகாது என்பதே தேற்றம்.

கட்டுரை வடிவமான இவ் விரிவுரை இடையிடையே வேண்டிய விளக்கங்களோடும் மாற்றங்களோடும் புத்தக வடிவமாக வெளியிடப்பட ஆம் என்பது எமது துணிபு.

உடலுயிர் அமல மடைந்து ஞானகாசத்தில் மறைதலாகிய உண்மை முத்திநிலையே "மூவடி முப்பது" முதலிய பொருளாகும். -x-

சத்திய நெறியாகிய — குரு நெறியாகிய உண்மைச் சைவ சமயமும் அதன் பயனாகிய உண்மை முத்தி நிலையும் வீடுபேற்றை விழையும் ஆற்றலும் காதலுமுடைய எல்லாச் சாதியாளர்க்கும் எல்லாச் சமயத்தவர்க்கும் உரியதே என்பதும் வித்தகம் தொகுதி 1 இல. 2 இலும். ஷை. தொகுதி 3 இல. 1 இலும் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு நன்று விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாற்றால், உலகில் வழங்கும் சமயக் கணக்கர் மதிப் பொலிவுக்கு எட்டாத அரிய பெரிய தத்துவமும் உயரிய சித்தாந்தமும், சில மரபினர்க்கு மாத்திரம் உரிய நாட்டு நெறியாகாது சகல சீவராசிகட்கும் உரிய சத்திய நெறியாகிய அநாதியான சைவ சமயத்துக் குரிய நித்தியத்துவ நிலையுமாகிய உண்மை முத்தியின் அருமை பெருமை "வித்தகம்" முதலிய வாற்றான் ஒருவாறு உரைக்கப் பட்டன.

இம் மூவாண்டுகளாக வெளிவந்த "வித்தக" சங்கிகைகளை ஆர்வமோடு படிப்பவர்கள் பண்டைய உண்மைச் சைவக் கொள்கைகளை — உண்மை முத்தி நிலையை விளக்கமாக அறிந்து கொள்ள ஆம்.

உடலுயிர் பிணி மூப்புக்களால் நலிந்து பிணவிய லடையாது ஒழிவற ஒன்றி அமல மடைந்து ஞானகாசத்தில் ஒடுங்கிச் சிவாங்க மாதலாகிய சத்திய நெறியாகிய சிவ நெறி முற்றுக மறைந்து,

சரீரம் பிணமாகி விழச் செத்துப் போதலே முத்தி என்னும் அசத்திய நெறியே சிவ நெறி ஆகித் தாண்டவம் புரியும் தற்காலச் சைவ உலகத்திற்கு — தமிழுலகத்திற்கு,

கலி ஐயாயிரத்து முப்பத்தைந்தாம் ஆண்டில் புதுவை நந்தி அருளால் புதுவையம்பதியாம் திருப்பெருந்துறையில் உதயமான "வித்தக" ஞானச் சுடர்,

வேதாகம மாதிகளால் கூறப்பட்டதும் சமயகுரவர் திருமூலர் இடைக்காடர் ஔவையார் முதலிய தத்துவப் பெரியாரால் — சித்து மூர்த்திகளால் தமது சொல்லாலும் அரும் பெரும் செயலாலும் நிலை நாட்டி அடையப் பெற்றதுமாகிய அநாதியான உண்மைச் சைவ முத்தி நிலையைப் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு வெள்ளிடை மலை போல விளக்கிக் காட்டு முகத்தால்,

பன்னெடுங்காலமாகப் பலர்க்கும் மறை பொருளான அத்தகைய முத்தி நிலையை ஞாபகப்படுத்தி ஆய்ந்துரைச் செய்த தென்பது நடுவு நிலைமையுடைய அறிஞரால் மறுக்க முடியாத உண்மையே ஆகும்.

இம் மூன்றாவது ஆண்டில் வெளி வந்த "வித்தக" சஞ்சிகைகளில் வெளியிடப்படுமாறு முன் போல, தமிழ் வளர்ச்சிக்குரியனவாய் ஒருதுறைக் கோவை யுரையும் பிறவுமாய் அமைந்த அரிய கட்டுரைகளை வழங்கிய,

எமது நெடுங்கால நண்பரும், உண்மையை நாடும் உத்தமரும், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களிலும் சங்கச் சான்றோர் நூல்களிலும் மற்றைய புராண காவியங்களிலும் மிக்க பாண்டித்திய முடையவரும், இலங்கா புராத்தியதன திராவிட கலாநிதி (Tamil Scholar of the day in Ceylon) எனப் போற்றப் படுபவருமாகிய

புன்னையம்பதி வித்துவான் ப்ரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களுக்கும், ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளது மகத்துவங்களைப் புலப்படுத்தும் கட்டுரைகளை வழங்கிய சம்ஸ்கிருத பண்டித மணிகளாகிய காசி அநுமான் காட் ப்ரமஸ்ரீ சீதாராம ஐயர் அவர்களுக்கும், மறை கண்ட நம்பி ப்ரமஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கும் எமது நன்றியறிதல் பற்றிய வாழ்த்தையும் வணக்கத்தையும் கையுறையாக அளிப்பதோடு,

மேலும் இப் பெரியார் இத் தகைய பணியில் ஈடுபட்டு உலகிற்கு உபகாரிகளாய் நீடு வாழும் வண்ணம் திருவருளை வேண்டுகின்றோம்.

ஏதும் அறியா ஏழை மதி வாய்ந்து முன்னிலைக் கோரணிகளால் அவச்சலனமடைந்து அன்பு நெறி தழுவாது இப் பவக்கடன் முழுகி அலமரா நின்ற நாயினும் கடையேமாகிய எம்மையும் அம்மைதோறாற்றும் அருந்தவப்பெற்றியால் பொருளெனக் கொண்டு பிறிதோர் ஆற்றானும் அறிதற்கரிய அரிய பெரிய வேத உண்மைகளை அருண் மாரி என வழங்கிடமையோடு,

தோன்றாத் துணையாய் இருந்து இவ் உண்மைகளை யெல்லாம் பரிபாஷைகள் மலிந்த பைந் தமிழ் நடையில் பிரபல சுருதிப் பிரமாணங்களோடும் உரிய விளக்கங்களோடும் தற்காலத் தமிழுலகம் அறிந்து உய்யும் வண்ணம் "வித்தக" வாயிலாக வெளியிடுதற் கேற்ற ஆற்றலையும் அளித்து,

சிறிதும் இல்லாது எமது செய் பணிகள் கைக் கொண்ட தாயனைய கருணையாளனும், ஞான சத்தி வடிவம் எனப்படும் சாந்த சிவ வடிவினனும், அம்பலத்து ஆடும் ஐயனுமாகிய புதுவை நந்தியெம் பெருமான் அருள் வண்மைக்கு யாது கைம்மாறும் உஞற்ற முடியாதாயினும்,

அவன் அருளால் அவன் பொன் அடித் துணைகளை மன மொழி மெய்களால் சிந்தித்து போற்றி வணங்கி அவன் திருவருளாணை நெறி வழுவாது பணி செய்து கிடக்கும் பேறு கைவரப் பெறுமாயின்,

அதுவே அவன் உவந் தருளுதற்குரிய கைம்மாறு என ஒருவாற்றான் அமையும் எனத் துணிந்து அமைதி பெறுகின்றோம்.

சுபம்.

விதுவணியுஞ்சடைமுடியோ னருளாந்த
வேதநெறி மேவுஞ் சைவப்

புதுமையெலா மெமக்கருளிப் பொய்
யகற்றி வீடருளும் புனிதமூர்த்தி

பதிகடமு ணனிசிறந்து சித்தர் பலர்
தொழநிலவும் பதியாந்தெய்வப்

புதுவையெனும் பெருந்துறைவாழ்
நந்திபிரான் பொன்னடிகள் போற்றி
[போற்றி.

எத்தனை தலஞ்சென்றாலும் எத்தீர்த்த
[மாடினாலும்

சித்தர்வாழ் புதுவைபோலச் சிறந்த
[தோன்றில்லைகண்டீர்

முத்தியை யுதவுஞான மொழிபுகன்
[றெல்லாம்வல்ல

சித்தனே ஈண்டுநின்று திருவிளையாடல்
[செய்வான்.

நமப்பார்வதீ பதயே! ஹர ஹர மஹா
[தேவ!

கோகிலாம்பிகை சமேத காமேசப்
பெருமான் திருவடிவாழ்க.

புதுவை நந்தி பொன்னடி வாழ்க.

மணிவாசகன் திருவடிக்குட் பல்லாண்டு

திருமூல வள்ளல் குரு மரபு வாழ்க.

"வித்தகம்" பல்லாண்டு வாழ்க.

சைவம் தழைக.

---

## "வித்தகம்."

### சந்தா விவரம்.

உள் நாட்டிற்கு முன் பணம் ரூ3-0-0

வெளி நாட்டிற்கு ... ... ரூ4 0-0

"வித்தகம்" ஆபீஸ்

புதுவை.

Imprimerie "VITTAGAM" -- Pondichèry Le Directeur-Gérant. R. Nagarattinam.